# வாக்களிப்பதற்கு ஒரு கிறிஸ்தவ வழி உண்டா?

இந்த வழிகாட்டுதல் ஆக்கம் கார்த்திகை 16ம் திகதியில் நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை கூறுவதற்காக அல்ல மாறாக ஒரு நாட்டின் தலைவரை தேர்ந்தெடுப்பதில் கிறிஸ்தவ கொள்கைகள், வேதாகம விழுமியங்கள் எமக்கு உதவுகின்றனவா என்பது பற்றியதாகும்.

## *நாம் வாக்களிக்க வேண்டுமா?*

முதலாவது கிறிஸ்தவர்கள் வாக்களித்தல் உலகத்துக்குரியது அல்லது அரசியல் நம்மை கருத்திலே கொள்வதில்லை என்றோ சிந்திக்கக்கூடாது. பரிசுத்த வேதாகமத்தின் பல பக்கங்கள் குறிப்பாக பழைய ஏற்பாட்டில் கடவுள் ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புக்கள் குறித்து கரிசனை உடையவராக இருக்கிறார் என்பது மட்டுமன்றி மக்களின் தேசிய வாழ்விலே அவர்களின் சொந்தப் பங்களிப்புக் குறித்தும் அக்கறை உடையவராக இருக்கிறார். அப்போஸ்தலர் 6 இல் மூப்பர்கள் தெரிவு செய்யப்பட்டதைத் தவிர வேதாகம காலத்திலே வாக்களித்தல் என்ற காரியம் காணப்படாத போதும் எரேமியா 29:7 இல் ‘‘நான் உங்களை சிறைப்பட்டுப் போகப் பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி அதற்காக கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள், அதற்கு சமாதானம் இருக்கையில் உங்களுக்கும் சமாதானம் இருக்கும்’’ எனக் கூறப்படுகிறது. இங்கே நாம் வாழும் தேசத்தின் நலனினை தேடும்படிக்காகவும் அதற்காக ஜெபிக்கும்படியாகவும் கேட்கப்படுகிறோம். எனவே நாம் எமது தேசத்திலே அந்நியமானவர்களாக எண்ணிக்கொண்டாலும்கூட (எமது மனநிலையில்) நாம் இந்த தேசத்தின் நலனினை தேடவேண்டும். தேசத்தின் நன்மையைத் தேடுவதில் மிகக் குறைவான ஓர் பங்களிப்பாக நாம் வாக்களித்தல் அமைகிறது.

இம்முறை எமது வாக்குக்களை கெடுப்பது (செல்லுபடியற்றதாக்குதல்) எமது தேசத்தின் நலனைத் தேடுவதில் நன்மையான காரியமாக அமையுமா? அல்லது அமையாதா? என்ற இரட்டைக்கேள்வி எம்மிடத்தில் எழலாம். வேண்டுமென்றே வாக்குக்களை சிதைப்பதன் ஊடாக தேர்தலில் போட்டியிடும் ஒருவரையும் நாம் விரும்பவில்லை என்ற செய்தியை போட்டியாளர்களுக்கு கூறமுடியும். இது வாக்களிக்காமல் விடுவதைவிட சற்று உயர்வானதாக அமையும். எப்படியோ நம்மை சுற்றியுள்ள உலகத்தை நிதானமாக புரிந்துகொள்ளுதல் என்பது அதன் விழுகைக்கு உட்பட்ட நிலையினை அங்கிகரிப்பதாகும். வேதாகமம் திருச்சபையும், பழைய ஏற்பாட்டு தலைவர்களும் கூட பூரணமற்றவர்கள் என இனம் காண்பிக்கின்றது (எனவும் சிலர் கூறலாம்). இச் சூழ்நிலையில் எமது வாக்குக்களை உயர்வான ஒரு பெறுபேற்றினை கொண்டுவரக்கூடிய வகையிலே பயன்படுத்துவதே சிறப்பானதாக அமையும்.

## *நாம் சிறந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமா? அல்லது மோசமானவரை வெளியேற்ற வேண்டுமா?*

பல இலங்கையர்கள் கடந்த காலங்களில் இத்தகைய தெரிவினை அடிக்கடி எதிர் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தடவையும் சிறந்ததோர் வேட்பாளர் வெற்றி பெறுவதற்கான

ஏதேனும் வாய்ப்பிருந்தால் அதுவோர் மெலிதான சாத்தியக்கூறாகவே இருக்கக்கூடும். அத்தோடு அத்தகைய நபருக்கு நாம் வாக்களிப்பது மோசமான வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பினை அதிகரிப்பதாகவும் அமையக்கூடும். இது ஒருவர் தனது வாக்கினை அளிப்பதா? அல்லது சிதைப்பதா? என்ற சங்கடத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது. சிறந்த வேட்பாளருக்கு வாக்களித்தல் என்ற பதிலீடு (அந்த நபர் வெற்றி பெறாது விட்டாலும் கூட) நாட்டின் நீண்டகால அரசியல் எதிர்காலத்துக்கு முதலீடு செய்வதான ஒரு செயலாகக் கருதப்படலாம். பல ஜனநாயக நாடுகளில் இரண்டு பெரிய கட்சிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவை பெரும்பாலும் குற்றவாளிகளைத் தண்டிப்பது (தண்டிக்காமல் விடுவது) உட்பட பல விடயங்களில் ஒத்துப்போகின்றன. இத்தகையதான கட்சி ஆதிக்கத்தினை மீறுவது கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். உதாரணமாக பாகிஸ்தானில் இம்ரான்கானின் நீதிக்கான பாகிஸ்தான் இயக்கம் 1996ம் ஆண்டு முதல் நீண்ட காத்திருப்புக்குள்ளாகி 2018ம் ஆண்டு பெரும் எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெற்று வெற்றியடைந்தமையைக் குறிப்பிடலாம். சிறந்தவர்களுக்கு வாக்களித்தல் என்பது (நீண்டகால மாற்றத்தைக் காணும் நம்பிக்கையில் வாக்களித்தல்) கிறிஸ்தவர்களைப் பொறுத்த வரையில் இலகுவானதும் உலகிற்கு ஒளியாய் இருத்தல் போன்றவோர் செயற்பாடாகவும் அமையலாம். ஆனால் தீமையைத் தவிர்ப்பதற்காக வாக்களித்தல் உடனடியானதும் மீள முடியாததுமான அழிவுகள் மற்றும் சிதைவுகள் தேசத்தில் ஏற்படாத வண்ணம் தடுக்கும்படி வாக்களித்தலாய் அமைகிறது. இது பூமிக்கு உப்பாயிருத்தல் போன்றவோர் செயற்பாடாகும். இயேசுக்கிறிஸ்துவின் காலத்தில் உப்பு, ஒளி போன்றவைகள் இவ் அர்த்தத்திலேயே உருவகப்படுத்தி பயன்படுத்தப்பட்டன (மத் 5:13-16)

## *வேட்பாளர் திருச்சபை சார்புடையவராகவா? அல்லது ஏழைகளுக்கு ஆதரவானவராகவா இருக்க வேண்டும்?*

வேதாகமம் முழுவதிலும் திருச்சபை என்பது தனது சொந்த இலாபங்களை கருத்திலே கொள்வதற்கு முன்பதாக மற்றவர்களின் நலனைத் தேடும் ஒரு அமைப்பாக சித்தரிக்கப்படுகிறது. பேராயர் டேவிட் செப்பேர்ட் (இங்கிலாந்து ரெஸ்ட் கிரிக்கெற்றில் விளையாடியவர்) என்பவர் கடவுள் ஏழைகளுக்கு சார்பானவர் என்று கூறுகிறார். எனவே எமது சமூகத்திலே காணப்படும் பலவீனமான பகுதிகளுக்கு எத்தகைய நன்மை கிடைக்குமென வேட்பாளர் தெரிவிப்பது எமக்கு யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற விடயத்தை தீர்மானிக்கும் ஒரு முக்கிய அளவுகோலாக அமையலாம். “அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான் அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான், அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரே 22:16). இது இஸ்ரவேலை அரசாண்ட நல்லதோர் அரசனான யோசியாவைக் குறித்து கூறப்பட்டதாகும். இக்காலத்தில் எல்லா வேட்பாளர்களும் ஏழைகளுக்கு விசுவாசமாய் இருப்பதாக உடன்படிக்கை செய்கிறவர்களாகக் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் ஒரு வேட்பாளரை நாம் தீர்மானிப்பதற்கு அவர்கள் வருமானவரி குறித்து கொடுக்கும் வாக்குறுதிகள் எமக்கு உதவி செய்யும். ஏனெனில் நவீன அரசுகளில் ஏழைகளின் தேவைகள், சேவைகள் சந்திக்கபடும் ஒரு வழியாக அமைவது வருமான வரி விதிப்பாகும். எனவே ஒரு வேட்பாளர் சமூகத்தின் மேல்தட்டு மக்களான பணம் படைத்தவர்களின் வருமான வரியை குறைப்பதாக வாக்குறுதி அளிக்கும் பட்சத்தில் அவர் சந்தேகிக்கப்படவேண்டிய ஒருவராக அமைகிறார். ஒப்பீட்டு அடிப்படையில் ஒடுக்கப்படுகிற பலவீனமான சிறுபாண்மை மக்களிடமிருந்து இவர் பெறுகின்ற ஆதரவின் அடிப்படையிலும் வேட்பாளர்களுக்கிடையில் பாகுபாடு காண்பது இலகுவானதாகும். இதை இன்னோர் சட்டத்தினூடாக நோக்கினால் தத்துவஞானி காள்பொப்பரின் வார்த்தையின்படி “ஒரு பெரிதான இலக்கத்துக்குக் கிடைக்கக்கூடிய மிகவும் பெரிதான

சந்தோஷத்தைத் தேடுவதைவிட எல்லோருக்கும் ஏற்ப்படக்கூடிய துன்பத்தை குறைந்தளவிலாவது தடுக்க முனைவது மேலானது'' என்பதைக் குறிப்பிடலாம்.

'வேட்பாளர் விளம்பரத்துக்காக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட வேண்டுமென்ற நோக்கில் அடிக்கடி மத ஸ்தலங்களுக்கும், மத அனுஸ்ட்டானங்களில் ஈடுபடுவதிலும், மத தலைவர்களை சென்று பார்ப்பதிலும் பரபரப்பாக இருத்தலும்' இவர்கள் சிறந்த முறையில் ஏற்புடையவர்களாக உள்ளனரா என வகைப்படுத்துவதை நிர்ணயிக்கிறது எனக் கூறலாம். தலைவர்கள் காண்பிக்கும் பகிரங்கமான மதப்பற்றின் அளவு (தேர்தலுக்கு முன்பதாகவோ அல்லது பதவியில் இருக்கும் போதோ) அவர்கள் வழங்குகின்ற நீதிக்கு நேர்மாறாக அல்லது தலைகீழான விகிதாசாரத்தில் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. கடவுளின் உணர்வினை வெளிப்படுத்தும் ஒரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியின் வார்த்தையால் பரிசுத்த வேதாகமம் அதை அற்புதமாக சித்தரிக்கிறது. ''உங்கள் பண்டிகைகளை பகைத்து வெறுக்கிறேன், உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை… உன் பாட்டுக்களின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று. உன் வீணையின் ஓசையை நான் கேக்கமாட்டேன். நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது.'' (ஆமோஸ் 5:21-24)

## *வேட்பாளரின் செயல்திறன் பதிவுகளை நாம் எவ்விதம் தீர்ப்பு செய்ய முடியும்?*

வேட்பாளர் ஒருவரின் செயல்திறன் பதிவுகளை தீர்மானிப்பது அல்லது தீர்ப்பிடுவது சற்றுக் கடினமானதாகும். ஏனெனில் இதில் பல காரணிகள் கருத்திலே கொள்ளப்பட வேண்டும். தற்போது ஆட்சியில் உள்ள ஒருவரின் செயற்திறன் பதிவுகளே எமது மனங்களில் புதிதாகக் காணப்படும். இவரோடு இப்படியொரு பதவியிலே முன்பு ஒருபோதும் இருக்காத ஒருவரின் செயற்திறன் பதிவுகளை ஒப்பிடுவது கடினமாகும் (அல்லது இவர் பதவியிலிருந்தும் இவரின் பதவிக்காலம் மக்களால் மறக்கப்பட்டிருக்கலாம்). ஒருவரைத் தீர்ப்பிடுவதிலே நாம் நேர்மறையான காரியங்களைக் கொண்டு தீர்ப்பிடுவதா அல்லது எதிர்மறையான காரியங்களைக் கொண்டு தீர்ப்பிடுவதா எனத் தீர்மானிப்பதும் கடினமாகும். உபாகமம் 17:14-20 இல் ஒரு நல்ல ஆட்சியாளனுக்கான அளவுகோலில் எதிர்மறை செயற்திறனும் உள்ளடக்கப்படுகிறது. (அவன் தனக்கு அநேக குதிரைகளை சம்பாதியாமலும் அநேக ஸ்திரீகளையும்… வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய் பெருகப்பண்ணவும் வேண்டாம்.) நேர்மறை விடயமாக (இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு இவைகளின்படி செய்வதற்காக தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளும் பொருட்டு) இதன்படி ஒரு ஆட்சியாளன் செல்வத்தினையும், அதிகாரத்தினையும் தனக்காக குவிக்கின்றாரா என்பது முக்கியமான எதிர்மறை அளவுகோலாக அமையும். இத்தகைய தன்மை ஏழைகளை இன்னும் வறுமைக்குள்ளே தள்ளுவதற்கு ஏதுவான காரியமாக அமையும். முக்கியமான நேர்மறை அளவுகோலாக அமைவது ஒரு ஆட்சியாளன் சட்டத்துக்கு கீழ்ப்படிபவனாக தன்னை அர்ப்பணித்துள்ளாரா என்பது அமையும். (உபாகமத்தின் பின்னணியில் இருந்து நமது சூழ்நிலை சற்று வேறுபட்டதாகக் காணப்பட்டாலும் பல ஒற்றுமைகளும் காணப்படுகின்றன.) இவர் தன்னை சட்டத்தை விடவும் அல்லது சட்டத்துறையை விடவும் மேலானவராகக் கருதுகிறாரா என்பதுடன் சட்டத்தினை தனது சுய இலாபத்திற்காக பிழையான முறையிலே கையாள முயற்சிக்கிறாரா என்பதும் கருத்திலே கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். இக்காரியத்தினை பல ஆட்சியாளர்கள் காலப்போக்கிலே செய்யும்படி சோதிக்கப்படுகிறார்கள். இதன் அடிப்படையிலே நீதித்துறை சுயாதீனமாக செயற்படுவதை

பாதுகாக்கின்ற அல்லது அதற்கு உத்தரவாதம் அளிக்கின்ற செயற்திறன் பதிவு மிகவும் முக்கியமான ஒரு நேர்மறை அளவுகோலாகக் காணப்படுகின்றது. தேர்தல் பிரச்சாரத்தின் போதும் வேட்பாளர்கள் தேர்தல் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பது மற்றும் வீண்செலவீனங்களைக் கட்டுப்படுத்துவது போன்றவையும் வேட்பாளர்களிடையே வித்தியாசத்தினைக் கண்டறிவதற்கு உகந்ததாக அமைகிறது.

## *ஸ்திரத்தன்மை, நல்லாட்சி மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றிலே நாம் எவ்வாறு தேர்வு செய்வது?*

கடந்த 2015ம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் பலராலும் ஸ்திரத்தன்மைக்கும் நல்லாட்சிக்கும் இடையிலான தெரிவாக சித்தரிக்கப்பட்டது. இது இவ்வாறு அமையுமாயின் கிறிஸ்தவ நோக்கு நிலையிலே இவைகளில் ஒன்று மற்றவைகளை விட விரும்பத்தக்கதாக அமையுமா என்ற வினா எழுகின்றது. நாம் ஏற்கனவே உபாகமத்திலே பார்த்தபடி நல்லாட்சி என்பது இவைகளில் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகிறது. ஸ்திரத்தன்மை குறித்து என்ன? பவுல் தீமோத்தேயுவிற்கு ஆலோசனை கூறும்போது ‘‘நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தி என்னவெனில் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்த்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகம் இல்லாமலும் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்’’ (1 தீமோ 2:1-2) சாதாரணமான மதிப்பீட்டிலே இதுவோர் ஸ்திரமான சமூகத்தினை அங்கிகரிப்பது போன்று தோன்றுகிறது. ஏவ்வாறாயினும் பழைய புதிய ஏற்பாடுகளில் மனித விவகாரங்களில் அதிக அக்கறை செலுத்தப்படுகின்ற விடயமாக அமைவது நீதியாகும். ஆனால் ஸ்திரமான ஆட்சி பெரும்பாலும் அநீதியான காரியங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. சாலொமோனின் ஆட்சி இஸ்ரவேல் வரலாற்றிலே மிகவும் ஸ்திரமானதாகக் காணப்பட்டது. பொருளாதாரம் மிகவும் உயர்வாகக் காணப்பட்டதால் வெள்ளி அதன் மதிப்பை இழந்தது. பொன் மாத்திரம் மதிப்பு மிக்கதாக அமைந்தது. (1 இரா 10:21) எவ்வாறாயினும் சாலொமோன் செல்வத்தைக் குவிப்பதற்கும் தனது நகரத்தை அழகுபடுத்துவதற்கும் தனது மக்கள் மீது அநியாய வரிகளை விதித்திருந்ததாக நாம் அறிகிறோம். இதன் விளைவாக இவனின் மரணத்தின் பின்பாக இஸ்ரவேல் ராஜ்ஜியம் இரண்டாகப் பிளவுபட்டது. நகரத்திற்கு புறம்பாக இருந்த இஸ்ரவேல் வம்சங்கள் இவ்வரிகளை செலுத்துவதற்கு தயாராக இருக்கவில்லை. (1 இரா 12) எனவே ஸ்திரத்தன்மை எப்போதும் கட்டமைப்பு ரீதியிலான அநீதிகளை மறைக்கக் கூடும். ஆகவே நாம் இதற்கு ஆதரவு அளிக்காமல் இருப்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் நம்மில் சிலரும்கூட இதனால் அனுகூலங்களைப் பெறக்கூடும்.

ஸ்திரத்தன்மை மற்றும் நல்லாட்சி என்ற கலவைக்குள் தேசிய பாதுகாப்பு என்னும் விடயமும் சேர்க்கப்படுகிறது. இன்று உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுக்கு இத் தேசிய பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகத் தெரிகிறது. ஒரு தலைமுறை அல்லது அதற்கு முன்பதாக தேசிய பாதுகாப்பு என்பது பகையுள்ள வெளிநாடு ஒன்றிலிருந்து வரக்கூடிய வெளியான அச்சுறுத்தல்களை கையாள்வதைக் குறிப்பதாக அமைந்தது. ஆனால் இது துரதிஸ்டவசமாக இன்று ஒரு நாட்டில் வாழும் மக்கள் குழுக்களில் இருந்து வரும் உள்ளான அச்சுறுத்தல்களை கையாள்வதாகவும் அர்த்தப்படுகிறது. இன்று நாமோ பல்கலாச்சார சமூகத்தில் வாழ்வதால் இதுவோர் யதார்த்தமாக தென்படலாம். ஏவ்வாறாயினும் இந்த அச்சுறுத்தல் இரு வகைகளில் கையாளப்படலாம். ஒன்று மிகவும் கடுமையான கண்காணிப்பு மற்றும் பல சோதனைச் சாவடிகளை அதிகரிப்பதினூடாக மற்றையது நாட்டின் குடிமக்களில் காணப்படும் குழுக்கள்

மத்தியிலே பெரிதான நம்பிக்கையையும், நல்லிணக்கத்தினையும் கட்டியெழுப்புவதினூடாக. இதனடிப்படையில் தனிநபர் ஒருவர் இதில் எது வேதாகம விழுமியத்துடன் ஒத்துப்போகிறது என்றும் எந்த வேட்பாளர் இதை ஊக்குவிக்கிறார் எனப் பார்த்து வாக்களிக்க முடியும்.

## *சில எச்சரிப்புக்களும் ஆலோசனைகளும்*

வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை அடிப்படையாகக் கொண்டு நான் இயலுமானவரை ஒரு கிறிஸ்தவ கண்ணோட்டத்தை பக்கச்சார்பின்றி தர முயற்சித்துள்ளேன். நான் ஏற்கனவே சில வேதவசனங்களை பயன்படுத்தியிருந்தாலும் வேதாகமம் முழுமையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் உலகக் கண்ணோட்டத்தை கண்டறிவதே மேன்மையான காரியமாக அமையும். அதைக் கூட நான் செய்வதற்கு முயற்சித்துள்ளேன். எப்படியோ வேதாகமம் நேரடியாக நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பேசவில்லை. அத்தோடு நாம் ஒவ்வொருவரும் எமது சொந்த நோக்குநிலை உடையவர்களாக இருக்கலாம். என்னுடைய இவ்வாக்கமும் எனது கருத்துக்கு ஒரு தெளிவான ஆதாரமாக அமையலாம். வேத வசனங்களை எமது சார்புக் கருத்துக்கு ஏற்ற வகையிலே வியாக்கியானம் செய்யும் சோதனையை மேற்கொள்வதற்கு எமது வியாக்கியானங்களுக்கான பிரயோகங்களை குழுக்களாக இணைந்து கலந்துரையாடுவதினூடாக மேற்கொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் இக் கலந்துரையாடல்கள் ஊடாக எம்மை வழிநடத்துவார். எமது வாக்குகள் தனிப்பட்டதும் இதை எமது விருப்பத்துக்கு ஏற்றவகையில் பயன்படுத்தும் சுதந்திரம் எமக்கு உண்டு என்பதும் உண்மையே. எவ்வாறாயினும் நாம் எவ்வாறு எல்லாப் பக்கங்களில் இருந்தும் தேர்தல் பிரச்சாரங்களை செவிமடுத்து அங்கும் இங்கும் அலைமோதுவது போல் நாம் வேதவசனத்தினையும் செவிமடுத்து கிறிஸ்தவ விசுவாசக் குழுக்களுடன் கலந்துரையாட வேண்டும். அத்தோடு நாம் யாருக்கு வாக்களிப்பது என்ற விடயத்திலே கிறிஸ்தவ சமூகத்திலே இதைக் குறித்து கலந்துரையாடி ஒரு அங்கிகாரமுள்ள ஒரு கிறிஸ்தவ தெரிவுக்கு வரலாம். நாம் ஒருமித்து ஒரு பொதுவான சம்மதத்துக்கு வராமல் இருக்கலாம். ஆனால் எமது காலத்தினை சரியாக புரிந்துகொள்வதற்கு வேதாகமத்தினூடாக தேவன் பேசுவதற்கும் மற்றும் விசுவாசிகளின் சமூகத்திற்கூடாக தேவன் பேசுவதற்கு நாம் செவிகொடுக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய இன்னுமோர் காரியமாக ஜெபம் அமைகிறது. தனிப்பட்ட முறையிலும் குழுக்களாக இணைந்தும் இத் தேர்தலின் பெறுபேற்றினூடாக கடவுளின் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென ஜெபிப்பதாகும். அநேகர் கடவுளின் குறுக்கீடு இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட விதத்திலே அற்புதவிதமாக வெளிப்படவேண்டும் என்ற அடிப்படையிலே தொடர்புபடுத்திப் பார்ப்பார்கள். எவ்வாறாயினும் ‘வரலாற்றின் கடவுளாக சாதாரண மனித விவகாரங்களில் அவரின் இடைப்பாடு அல்லது குறுக்கீடு அதைவிட பரவலான முறையில் நடைபெறுவதை’ வேதவசனத்தினூடாக காணலாம் என விவாதிக்கமுடியும். இத்தகைய காரியம் ஜெபத்திலே ஈடுபடுகின்ற எம்மை உற்சாகப்படுத்துவதாக அமையவேண்டும்.

பிரியான் டயஸ்

கார்த்திகை 2019